**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109706

1. District : நீலகிரி மாவட்டம் — PS: VdAC காவல்நிலையம் — Year: 2021 ஆண்டு — FIR No.: 06/21 மு.த.அ. எண் — Date: 01.11.2021 நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 ammended — Sections பிரிவுகள்: 7, 12
(ii) Act சட்டம்: as PC (Ammendment) Act — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: 2018 + Cr.P.C. — Sections பிரிவுகள்: 102
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் — Date to : நாள் வரை prior to 29.10.2021 16.00hrs.
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.11.2021 — Time : நேரம் 11.30 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — — Time : நேரம் —

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — about 11Km South.
Beat Number : முறைக் காவல் எண் — — (b) Address : முகவரி —
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. Kumararaja — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் —
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் Indian — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Spl. Thasildar SSS — (g) Address : முகவரி Udhagamandalam Taluk, The Nilgiris

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. A. Kulothungan, MVI, Gr I office of the RTO, udhagamandalam.
2. S. Ashokumar, S/o. Selvaraj, No 308, Manjanakorai, Fernhill, ooty.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

Scanned with CamScanner

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 1/11/2021 | B. Geethalakshmi 1/11/21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் B. கீதாலட்சுமி
Rank: நிலை ....................No. எண் ..........
காவல் ஆய்வாளர்
ஊ.த.க. பிரிவு,
நீலகிரி மாவட்டம்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

Scanned with CamScanner

<u>ஊ.த.க.பிரிவு கு.எண்.6/2021/AC/NI வழக்கின் முதல் தகவல் அறிக்கை:-</u>

கனம் உதவி அமர்வு நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, உதகமண்டலம் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 01.11.2021 ஆம் தேதி காலை 11.30 மணிக்கு காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி மாவட்டம் B.கீதாலட்சுமி ஆகிய நான் அலுவலகத்தில் இருக்கும்போது நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், சமூக பாதுகாப்பு திட்டம், தனி வட்டாட்சியர் பொறுப்பு மாவட்ட ஆய்வு குழு அலுவலர் திரு.R.குமாரராஜா அவர்கள் நிலையம் ஆஜராகி புகார் மனு ஒன்றினை கொடுத்தார். அந்த புகார் மனு விவரம் பின்வருமாறு: அனுப்புநர் R.குமாரராஜா, தனி வட்டாட்சியர், சமூக பாதுகாப்பு திட்டம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம் பொறுப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். அம்மையீர், பார்வை: 1) நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை எண். Pdl.A1.No.30/2021 நாள்: 29.10.2021. நீலகிரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு) ஆகிய நான், 29.10.2021-ம் தேதி நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், உதகமண்டலத்திலிருந்து குன்னூர் செல்லும் பிரதான நெடுஞ்சாலையில் அமைந்துள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் எதிர்வரும் தீபாவளி பண்டிகைக்காக இடைத்தரகர்கள் மற்றும் ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் மூலம் தொகைகளைப் பெற்று தனிநபர் மூலம் மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் போக்குவரத்து துறை அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுத்துவருவதாக கிடைத்த நம்பகமான தகவலின் பேரில் நான் நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திருமதி.B.கீதாலட்சுமி மற்றும் போலிஸ் பார்ட்டி சகிதம் அவ்வலுவலகத்தை 29.10.2021 ஆம் தேதி மாலை 16.00 மணிமுதல் 19.30 மணிவரை திடீர் சோதனை மேற்கொண்டோம். இந்த திடீர் சோதனையின்போது வட்டார போக்குவரத்து அலுவலக வளாகத்தில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.A.குலோதுங்கன் மற்றும்

Geethalakshmi
1/11/21

Scanned with CamScanner

அவரது அறையில் இருந்த தனிநபர் திரு.S.அசோக்குமார் இருந்தனர். திரு.குலோதுங்கன், மோட்டார் வாகன ஆய்வாளரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தன்னிடமிருந்த ரூ.1,010/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க, அவர் தன்னுடைய சொந்த பணம் என்று கூறினார். Cash declaration register-ஐ பார்க்க அதில் பதிவுகள் இருந்ததால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் திரு.S.அசோக்குமாரை சோதனை செய்து அவர் வைத்திருந்த பணம் ரூ.1,38,550/-ஐப்பற்றி கேட்க, அவர் மோட்டார் வாகன ஆய்வாளர், திரு.குலோதுங்கன் அவர்களின் அறிவுரையின் பேரில் கடந்த 25.10.2021 ஆம் தேதி முதல் 29.10.2021 ஆம் தேதி வரை இடைத்தரகர்கள் மற்றும் ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் மூலம் போக்குவரத்து அலுவலகத்தில் எதிர்வரும் தீபாவளி பண்டிகைக்காக வசூல் செய்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.A.குலோத்துங்கனுக்கு கொடுக்க வைத்திருந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் ரூ.1,38,550/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டு அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது. மேலும் இந்த திடீர் சோதனையின் போது 1) Attested copy of Fitness Issue report for the day 29.10.2021 S.No.1 to 30, 2) Attested copy of Issue of Driving License for the day 29.10.2021 S.No.1 to 30, 3) Attested copy of Vehicle Registration details report for the day 29.10.2021 S.No.1 to 32, 4) Attested copy of cash declaration for the day 29.10.2021, (2 sheets), 5) Attested copy of Attendance register for the day 29.10.2021 (7-sheets) ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கை சம்மந்தமாக செயல்முறை ஒன்று தயாரிக்கப்பட்டது. இந்த செயல்முறையினையும், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,38,550/-, தனிநபர் திரு.அசோக்குமாரின் வாக்குமூலம் மற்றும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை கடந்த 30.10.2021 மற்றும் 31.10.2021 ஆகிய தேதிகள் விடுமுறை

Jayageethalakshmi
1/11/21

Scanned with CamScanner

என்பதால் இன்று (01.11.2021) தங்களிடம் காலை 11.30 மணிக்கு ஆஜர் செய்கிறேன். உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் R.குமாரராஜா 01.11.2021. Submitted Received the above typed complaint on 01.11.2021 at 11.30 hrs and registered a case in The Nilgiris Detachment Cr.No.6/2021/AC/NI u/s 7, 12 of PC Act 1988 amended as PC (Amendment) Act 2018 and 102 Cr.PC. ஒப்பம் கீதாலட்சுமி 01/11/2021 Inspector of Police, Vigilance and Anti - Corruption, The Nilgiris. செயல்முறை நடவடிக்கைகள் பின்வருமாறு: Proceedings of the Surprise Check conducted on 29.10.2021 between 16.00 hrs and 19.30 hrs at the Regional Transport Office, Udhagamandalam, The Nilgiris District. முன்னிலை: 1) R.குமாரராஜா, தனி வட்டாட்சியர், சமூக பாதுகாப்பு திட்டம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம், பொறுப்பு மாவட்ட ஆய்வு குழு அலுவலர், நீலகிரி மாவட்டம். 2) திருமதி.B.கீதாலட்சுமி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். இன்று 29.10.2021-ஆம் தேதி நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர் திரு.R.குமாரராஜா ஆகிய நான் நீலகிரி மாவட்ட ஆட்சியர் உத்தரவுப்படி நீலகிரி மாவட்ட பொறுப்பு மாவட்ட ஆய்வு குழு அலுவலராக பணியிலிருந்து கொண்டு எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அரசு அலுவலகங்களில் நடைபெறும் ஊழல் தொடர்பான நிகழ்வுகளை கண்காணித்துக் கொண்டிருந்தபோது, எனக்கு கிடைத்த இரகசிய தகவலில் உதகமண்டலம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் எதிர்வரும் தீபாவளி பண்டிகைக்காக இடைத்தரகர்கள் மற்றும் ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் மூலம் தொகைகளைப் பெற்று மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் போக்குவரத்து துறை அலுவலர்களுக்கும் லஞ்சமாக கொடுத்துவருவதாக கிடைத்த நம்பகமான தகவலின் பேரில், நானும் உதகமண்டலம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் திருமதி.B.கீதாலட்சுமி மற்றும் காவல்துறையினர் சகிதம் இன்று (29.10.2021) மாலை 16.00 மணிமுதல் உதகமண்டலம் வட்டார

B.Geethalakshmi
1/11/21

Scanned with CamScanner

போக்குவரத்து அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டோம். இந்த திடீர் சோதனையின்போது உதகமண்டலம், குன்னூர் சாலையில் அமைந்துள்ள உதகமண்டலம் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்குள் நுழைந்தபோது அது தரைதளம் மற்றும் முதல்தளம் கூடிய கட்டிடமாக இருந்தது. இந்த கட்டிடத்திற்குள் நுழைந்து முதலாவதாக உள்ள வட்டார போக்குவரத்து அலுவலர் அறைக்குள் நுழைந்தபோது அந்த அறையில் யாரும் இருக்கவில்லை. அதற்கு அடுத்ததாக இருந்த மோட்ட வாகன ஆய்வாளர் அறையில் பின்னர் பெயர் மற்றும் பதவி விவரம் கேட்டுத்தெரிந்த திரு.A.குலோத்துங்கன் என்பவர் அவரது இருக்கையில் அவர் அமர்ந்திருந்தார். அவரிடம் மாவட்ட தணிக்கை அலுவலர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோர் தங்களை அறிமுகம் படுத்திக்கொண்டு அனைவரும் சுய பரிசோதனை செய்த பின்னர் இந்த திடீர் சோதனைக்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொண்டனர். பின்னர் விசாரிக்க தான் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 என்று கூறினார், அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து அவரது பேண்டின் முன்பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.1,010/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க வீட்டிலிருந்து செலவிற்காக பணம் ரூ.1300/-ஐ எடுத்து வந்ததாகவும், இது குறித்து Cash Declaration Register-ல் பதிவு செய்திருப்பதாகவும் கூறினார். அதில் செலவு போக மீதம் ரூ.1010/- வைத்திருந்ததாகவும் கூறியதால் பதிவேட்டை ஆய்வு செய்ய சரியாக இருந்ததால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவருக்கு நேர் எதிரே நின்றிருந்த பின்னர் பெயர் விவரம் தெரிந்த திரு.S.அசோக்குமார் என்பவர் நின்றிருந்தார். அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பேண்டின் முன்பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.1,38,550/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க கடந்த 25.10.2021 ஆம் தேதி முதல் 29.10.2021 ஆம் தேதி வரை இடைத்தரகர்கள் மற்றும் ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் மூலம் போக்குவரத்து அலுவலகத்தில் எதிர்வரும் தீபாவளி பண்டிகைக்காக மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.A.குலோத்துங்கனுக்கு கொடுக்க வைத்திருந்த பணம் என்று

Amrithavalakshmi
1/11/21

Scanned with CamScanner

கூறியதால் அந்த பணம் ரூ.1,38,550/- கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக மோட்டார் வாகன ஆய்வாளர் அறைக்கு வெளியே நின்றிருந்த பின்னர் பெயர் விவரம் தெரிந்த அலுவலக உதவியாளர் திரு.சிவராஜ் என்பவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பேண்டின் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.420/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க வீட்டிலிருந்து செலவு வாங்க எடுத்து வந்த பணம் என்றும், இது குறித்து Cash Declaration Register-ல் பதிவு செய்திருப்பதாகவும் கூறியதால், பதிவேட்டை ஆய்வு செய்ய சரியாக இருந்ததால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக வட்டார போக்குவரத்து அலுவலரின் அறைக்கு பின்புறமாக முதல்தளத்திற்கு படிக்கட்டு வழியாக மேலே சென்றால், அலுவலக அறை ஒன்று உள்ளது. அந்த அறையின் உள்ளே நுழைந்தவுடன் வலது பக்கமாக இருந்த கேபினில் முதலில் இருந்த இருக்கையில் பின்னர் பெயர் விவரம் தெரிந்த இளநிலை உதவியாளர் திரு.D.சுகந்தன் என்பவர் அமர்ந்திருந்தார். அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பேண்டின் வலதுபக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.350/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க வீட்டிலிருந்து சாப்பாடு செலவிற்காக பணம் ரூ.530/-ஐ எடுத்து வந்ததாகவும், இது குறித்து Cash Declaration Register-ல் பதிவு செய்திருப்பதாகவும் கூறினார். அதில் செலவு போக மீதம் ரூ.350/- வைத்திருந்ததாகவும் கூறியதால் பதிவேட்டை ஆய்வு செய்ய சரியாக இருந்ததால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்தாக இருந்த இருக்கை காலியாக இருந்தது. அடுத்ததாக இருந்த இருக்கையில் பின்னர் பெயர் விவரம் தெரிந்த உதவியாளர் திரு.சண்முக சுந்தரம் என்பவர் அமர்ந்திருந்தார். அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பேண்டின் பின்பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.390/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க வீட்டிலிருந்து சாப்பாடு செலவிற்காக பணம் ரூ.550/-ஐ எடுத்து வந்ததாகவும், இது குறித்து Cash Declaration Register-ல் பதிவு செய்திருப்பதாகவும் கூறினார். அதில் செலவு போக மீதம் ரூ.390/- வைத்திருந்ததாகவும் கூறியதால், பின்னர் பதிவேட்டை

Amsgeethjalakshmi
1/11/21

Scanned with CamScanner

ஆய்வு செய்ய சரியாக இருந்ததால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அந்த கேபின் பேசேஜில் முதலில் இருந்த அறையில் இருக்கையில் பின்னர் பெயர் விவரம் தெரிந்த நேர்முக உதவியாளர் திரு.K.N.ரமேஷ் என்பவர் அமர்ந்திருந்தார். அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது சட்டை பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.220/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க வீட்டிலிருந்து இன்று வெள்ளிகிழமை என்பதால் பூஜை செலவிற்காகவும், வீட்டு செலவிற்காகவும் பணம் ரூ.950/-ஐ எடுத்து வந்ததாகவும், இது குறித்து Cash Declaration Register-ல் பதிவு செய்திருப்பதாகவும் கூறினார். அதில் செலவு போக மீதம் ரூ.220/- வைத்திருந்ததாகவும் கூறியதால் பதிவேட்டை ஆய்வு செய்ய சரியாக இருந்ததால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவர் அமர்ந்திருந்த இருக்கைக்கு வலதுபுறமாக இருந்த அறையில் வலதுபக்கமாக இருந்த இருக்கையில் பின்னர் பெயர் விவரம் தெரிந்த கண்காணிப்பாளர் திரு.P.பாண்டியன் என்பவர் அமர்ந்திருந்தார். அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பேண்டின் பின்பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.410/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க வீட்டிலிருந்து சொந்த செலவிற்காக பணம் ரூ.530/-ஐ எடுத்து வந்ததாகவும், இது குறித்து Cash Declaration Register-ல் பதிவு செய்திருப்பதாகவும் கூறினார். அதில் செலவு போக மீதம் ரூ.410/- வைத்திருந்ததாகவும் கூறியதால், பதிவேட்டை ஆய்வு செய்ய சரியாக இருந்ததால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. கண்காணிப்பாளருக்கு எதிரே வலதுபக்கமாக இருந்த இருக்கையில் பின்னர் பெயர் விவரம் தெரிந்த உதவியாளர் திருமதி.C.கல்பனாதேவி என்பவர் அமர்ந்திருந்தார். அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பர்ஸிலிருந்து பணம் ரூ.1,630/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க வீட்டிலிருந்து சொந்த செலவிற்காக பணம் ரூ.1750/-ஐ எடுத்து வந்ததாகவும், இது குறித்து Cash Declaration Register-ல் பதிவு செய்திருப்பதாகவும் கூறினார். அதில் டீ செலவு போக மீதம் ரூ.1630/- வைத்திருந்ததாகவும் கூறியதால், பதிவேட்டை ஆய்வு செய்ய சரியாக

Jayageethalakshmi
1/11/21

Scanned with CamScanner

இருந்ததால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இருந்த இருக்கையில் பின்னர் பெயர் விவரம் தெரிந்த தட்டச்சர் திரு.G.ரமேஷ் என்பவர் அமர்ந்திருந்தார். அவரை சோதனை செய்ய அவர் தன்னுடைய பேண்டின் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.1010/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க வீட்டிலிருந்து சொந்த செலவிற்காக எடுத்து வந்ததாகவும், இது குறித்து Cash Declaration Register-ல் பதிவு செய்திருப்பதாகவும் கூறியதால், பதிவேட்டை ஆய்வு செய்ய சரியாக இருந்ததால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இருந்த இருக்கையில் பின்னர் பெயர் விவரம் தெரிந்த கணக்கர் திரு.S.சக்திவேல் என்பவர் அமர்ந்திருந்தார். அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பேண்டின் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.650/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க வீட்டிலிருந்து செலவிற்காக பணம் ரூ.1400/-ஐ எடுத்து வந்ததாகவும், இது குறித்து Cash Declaration Register-ல் பதிவு செய்திருப்பதாகவும் கூறினார். அதில் மதிய உணவு மற்றும் ஆட்டோ செலவு போக மீதம் ரூ.650/- வைத்திருந்ததாகவும் கூறியதால், பதிவேட்டை ஆய்வு செய்ய சரியாக இருந்ததால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இருந்த இருக்கையில் பின்னர் பெயர் விவரம் தெரிந்த உதவியாளர் திரு.சண்முக கனி என்பவர் அமர்ந்திருந்தார். அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது சட்டையின் மேல்பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.260/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க வீட்டிலிருந்து செலவிற்காக பணம் ரூ.910/-ஐ எடுத்து வந்ததாகவும், இது குறித்து Cash Declaration Register-ல் பதிவு செய்திருப்பதாகவும் கூறினார். அதில் சாப்பாடு செலவு போக மீதம் ரூ.260/- வைத்திருந்ததாகவும் கூறியதால், பதிவேட்டை ஆய்வு செய்ய சரியாக இருந்ததால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் முதல் தளத்திலிருந்து தரை தளத்தில் உள்ள வட்டார போக்குவரத்து அறைக்கு வந்தபோது பின்னர் பெயர் விவரம் தெரிந்த வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.R.தியாகராஜன் என்பவர் சுமார் 17.00

Amsquttyalakshmi
1/4/21

Scanned with CamScanner

மணிக்கு அலுவலகம் வந்தார். அவரிடம் விவரம் கூறி அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.760/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க வீட்டிலிருந்து செலவிற்காக பணம் ரூ.1280/-ஐ எடுத்து வந்ததாகவும், இது குறித்து Cash Declaration Register-ல் பதிவு செய்திருப்பதாகவும் கூறினார். அதில் மதிய உணவு செலவு போக மீதம் ரூ.760/- வைத்திருந்ததாகவும் கூறியதால், பதிவேட்டை ஆய்வு செய்ய சரியாக இருந்ததால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையானது 29.10.2021 ஆம் தேதி 16.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 19.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது வட்டார போக்குவரத்து அலுவலர்கள் கண்ணியமாக நடத்தப்பட்டனர். இந்த திடீர் சோதனையில் 1) கணக்கில் வராத பணம் ரூ.1,38,550/- (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தெட்டாயிரத்து ஐநூற்று ஐம்பது மட்டும்), 2) Attested copy of Fitness Issue report for the day 29.10.2021 S.No.1 to 30, 3) Attested copy of Issue of Driving License for the day 29.10.2021 S.No.1 to 30, 3) Attested copy of Vehicle Registration details report for the day 29.10.2021 S.No.1 to 32, 4) Attested copy of cash declaration for the day 29.10.2021, (2 sheets), 5) Attested copy of Attendance register for the day 29.10.2021 (7-sheets) ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலக பணபரிவர்த்தனை முழுவதும் இணையவழிமூலம் நடைபெறுவதால் பணம் தொடர்பான பதிவுகள் எதுவும் பதிவேடுகளில் இல்லை. மேலும் கொடிநாள் பதிவேட்டை சரிபார்க்க இந்த வருடத்திற்கான தொகை மூன்று இலட்சத்திற்கான ரசீதுகள் கொடுக்கப்பட்டு அதற்கான தொகையை 30.07.2021 ஆம் தேதிக்கு முன்பே சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த திடீர் சோதனைக்கு இடையில் திரு.S.அசோக்குமார் என்பவரிடமிருந்து மாவட்ட ஆய்வு குழு அலுவலர் 18.30 மணிமுதல் 19.00 மணிவரை வாக்குமூலம் பதிவு செய்தார். இந்த சோதனையின் போது இன்றைய தினம் வெள்ளிக்கிழமை என்பதாலும், மாலை நேரம் என்பதாலும் பொதுமக்கள் யாரும் அலுவலகத்தில்

Dorgeethyalakshmi
1/11/21

Scanned with CamScanner

இருக்கவில்லை. பிரண்ட்ஸ் டிரைவிங் ஓட்டுநர் பயிற்சி பள்ளியைச் சேர்ந்த திரு.பால் என்பவர் அலுவலகத்தில் இருந்தார். அவரை விசாரிக்க தன்னுடைய வாடிக்கையாளரின் ஓட்டுநர் உரிமம் பற்றி விசாரித்து செல்ல வந்ததாக கூறினார். அவரை சோதனை செய்ய அவரிடம் எந்த பணமும் இல்லாததால் அவர் அனுப்பி வைக்கப்பட்டார். இந்த திடீர் சோதனை செயல்முறையில் திரு.R.குமாரராஜா, தனி வட்டாட்சியர், சமூக பாதுகாப்பு திட்டம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம் (பொறுப்பு), மாவட்ட ஆய்வு குழு அலுவலர், நீலகிரி மாவட்டம், காவல் ஆய்வாளர் திருமதி.B.கீதாலட்சுமி, வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.R.தியாகராஜன், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.A.குலோத்துங்கன் மற்றும் திரு.S.அசோக்குமார், த/பெ செல்வராஜ், மஞ்சனக்கொரை, பெர்ன்ஹில், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம் ஆகியோர் கையொப்பம் செய்தனர். இந்த திடீர் சோதனை செயல்முறையானது தலைமைகாவலர் திரு.நா.சக்தி என்பவர் கணினியில் தட்டச்சு செய்தார். நான் மேற்கண்ட புகாரினையும், செயல்முறை ஆணையினையும் இன்று 01.11.2021-ம் தேதி காலை 11.30 மணிக்கு பெற்று, உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.6/2021/AC/NI u/s 7, 12 of PC Act 1988 amended as PC (Amendment) Act 2018 and 102 Cr.PC-ன் படி வழக்கு பதிவு செய்து, இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல், அசல் புகார், அசல் செயல்முறை மற்றும் படிவம் 91 மூலமாக கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,38,550/- (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தெட்டாயிரத்து ஐநூற்று ஐம்பது மட்டும்) ஆகியவற்றை கணம் உதவி அமர்வு நீதிபதி மற்றும் சிறப்பு நீதிபதி, உதகமண்டலம் அவர்களுக்கு சமர்பித்தேன். முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

Geethalakshmi
1/11/21
காவல் ஆய்வாளர்
ஊ. த. க. பிரிவு
நீலகிரி மாவட்டம்.

Scanned with CamScanner